முருகப்பெருமான் துணை

**மகான் பாம்பாட்டிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.07.2023**, திங்கட்கிழமை

1. தவமுறை தனித்துவம் கூட்டி
தனிப்பெருங் கருணை வடிவாக
அவதாரம் புரிந்த அரங்கனே
அண்ணலே உன் பெருமைகூறி
2. கூறியே சோபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா மூவைதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 15ம் நாள், 31.07.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க பாம்பாட்டிச்சித்தர் யானும்
3. யானுரைக்க பற்றை விட்டுவிட்டு
எதார்த்த எளிமை வாழ்வாய்
ஞானமாம் அரங்கன் காட்டும்
நல்வழிக்கு வந்து விடு
4. வந்துவிட சடுதி மாற்றம்
வல்லமையான வினை கரைந்து
சிந்தை தெளிவு திடமும்
சித்திமிகு ஞானிகளை வணங்கும்
5. வணங்கும் நடைமுறை கூடி
வந்தடையும் நல்லொழுக்கமும்
இணங்கி பிறர் நலம் பேனும்
இணையில்லா தயவும் பெருகி
6. பெருகியே சேவை முகாந்திரமாய்
பெருமைபட அரங்கன் காட்டும்
தரும வழிகளை ஏற்று
தன்னார்வத் தொண்டதனை வளர்க்கநேரும்

7. நேருமை கொண்ட மக்களாய்
நீதிவழி நேசம்பட நடந்து
வருங்காலம் உணரும் திடமும்
வள்ளல் தன்மையும் கூடி சிறப்பர்

8. சிறப்புதரும் ஞான வள்ளல்
சித்திமிக்க அரங்கன் வழி
மறுப்பின்றி தீட்சை ஏற்று
மனமாற பூசைமுறை தொடர

9. தொடரவே பொறிபுலன் அடங்கி
தெளிவுற வாசி ஓட்டம்
சுடர்போல் மேல் எழும்பி
சுழுமுனை தனை தழுவி நிற்கும்

10. நிற்கவே தசவாசல் ஒளி
நிலமதனில் வெளிப்பட்டு அரங்கனை
ஏற்புகொண்ட அக்கணமே
இலகுவாய் ஞானியாகும் சூட்சுமம்

11. சூட்சுமம் விளங்கி தெளிந்து
சுப்ரமண்யர் ஞானபலமாக
மாட்சிமைபட ஞானி ஆவர்
மரணம் வென்று திளைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–